*1971 ஜூலை 20]*

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நகராட்சிகளைப் பொறுத்தவரையில் பொதுப் பிரிவு மற்றும் மின்சாரம் பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்கள் குறித்துத் தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக் குழு செய்துள்ள பரிவுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு அவர்களின் சம்பள விகிதங்களும் திருத்தியமைக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

நகராட்சிகளில் உள்ள பல்வேறு மின்சார நிறுவனங்களின் குறைகளைப்பற்றிப் பரிசீலனைசெய்ய குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. அந்தக் குழுவில் சி. என். ராகவன் கூட்டுச் செயலாளர், நிதித்துறைத் தலைவராக இருக்கிறார், மேலும் நகராட்சி நிர்வாக அதிகாரியும், அரசு தலைமை இன்ஸ்பெக்டரும் தொழிலாளர் துறை ஆணையரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். விரைவில் அதனுடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

*Junior Basic School at Poosaripatti*

* 320 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether a Junior Basic School was opened at Poosaripatti in Madurai District, in the academic year 1967–68; and

(*b*) if so, the strength of the school in 1967–68 and 1968–69?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ):

| வருடம் | எண்ணிக்கை |
|---|---|
| *1967–68* | *114 (59 மாணவர்கள், 55 மாணவிகள்)* |
| *1968–69* | *165 (86 மாணவர்கள், 79 மாணவிகள்)* |

Dr. H. V. HANDE: Sir, may I know whether any person went to the court in regard to this matter and wheher the court has passed judgment against the order of the Director of Public Instruction? May I know the full details about it?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்த பூசாரிபட்டி என்ற ஊரிலே டி. எஸ். ராஜன் உதவிபெறும் ஜூனியர் ஆதாரப்பள்ளி துவக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் சார்பாகவும் ஒரு பள்ளி துவக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து டி. எஸ். ராஜன் உதவி பெறும் நிறுவனத்தினர் ரிட் பெட்டிஷன் போட்டார்கள். அது உயர் நீதிமன்றத்திலே விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எண்ணிக்கை, மாணவர்கள் தன்மை ஆகியவற்றைப் பார்த்து இரண்டு பள்ளிகளும் இயங்குவதற்கு இடம் இருக்கிறதா என்று பார்த்து நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவேண்டும் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அதன் பேரில் பள்ளி இயக்குநர் மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி மூலமாக ஆராய்ந்து பார்த்து இரண்டு பள்ளிகளும் இயங்கலாம்;

எந்த ஒரு பள்ளியும் நீக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று கூறியிருக்கிறார்கள். 1967-68-லே உதவி பெறும் பள்ளியிலே 98 பேர்களும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியிலே 114 பேர்களும் இருந்தார்கள். 1968-69-லே உதவி பெறும் பள்ளியிலே 46 பேர்களும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியிலே 165 மாணவர்களும் இருந்தார்கள் என்று கணக்கு இருக்கிறது. கல்வி இயக்குநர் இரண்டு பள்ளிகளும் இயங்கலாம் என்று அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கிறார்கள்.

செஞ்சியிலே பெண்கள் ஆதாரப்பயிற்சிப் பள்ளி

* 321. வினா—திரு. ரா. சா. முனுசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் ஒரு பெண்கள் ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி நிறுவும் உத்தேசம் ஏதேனும் அரசினர் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

வாலாஜாவிலுள்ள மகளிர் ஆதாரப்பயிற்சிப்பள்ளி

* 322. வினா. திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வாலாஜாவிலுள்ள மகளிர்க்கான அரசினர் ஆதாரப்பயிற்சிப்பள்ளி, அதன் கட்டடம் நல்ல நிலையில்இல்லாததால் மூடப்பட்டு இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளியின் கட்டிடம் நகராட்சிக்குச் சொந்தமானது. கட்டிடத்தைப் பழுது பார்க்க, இடத்தைக் காலி செய்து வேறு கட்டிடத்தில் பள்ளி இயங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வாறு முடியாவிட்டால், பள்ளிக்கூடத்தை மூடுவது என்றும், அப்பள்ளி மாணவிகளை வேறு பள்ளியில் சேர்ப்பது என்றும் யோசனையில் இருந்து வருகிறது.

*Mobile Hospital under Chittaranjan Das Memorial Scheme*

* 323 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to start a Mobile Hospital in this State under the Chittaranjan Das Memorial Scheme; and

(b) if so, the details thereof?